# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
(See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2010 மார்ச் திங்கள் 11.03.2010–ம் நாள் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.

***முன்னிலை***

திரு.ஜே.ஜேசையா,பி.எஸ்ஸி., டி.பி.எம்.,
நகர்மன்ற தலைவர்.

**25.01.2010–ம் தேதி நடைபெற்ற சாதாராணக்கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்ட பொருள் எண்.15**

புதிய குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கு பின்பற்றத்தக்க வழிமுறைகள் தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் இருந்து சுற்றறிக்கை ந.க.எண். 748/08/குவ2, நாள் 21.09.2009 –ல் பெறப்பட்டது.

மேற்கண்ட சுற்றறிக்கையின்படி புதிய குடிநீர் குழாய் இணைப்பிற்கான கட்டணம் ஒளிவு மறைவு இன்றி, பெறுபவர்களுக்கு தெரியப்படுத்தவும், மேலும் விண்ணப்பித்த 7 தினங்களுக்குள் குடிநீர் இணைப்பு வழங்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் புதிய குடிநீர் குழாய் இணைப்புக்கான விண்ணப்பப் படிவம் தகவல் மையத்தில் இருந்து இலவசமாக வழங்கப்பட வேண்டும். புதிய குடிநீர் இணைப்பிற்கு கீழ்கண்டவாறு தொகை நிர்ணயம் செய்து நகராட்சியின் தகவல் பலகையிலும், வரி வசூலிக்கும் மையத்திலும் அறிவிப்பதோடு பெரிய அளவில் விளம்பரப்படுத்தவும் வேண்டும்.

(அ) விண்ணப்பப் படிவ கட்டணம் – இலவசம்
(ஆ) வைப்புத் தொகை (குளச்சல் நகராட்சி குடிநீர் விநியோக துணை விதிகளின் படி)
 (அ) வீட்டு பயன்பாடு – ரூ. 2000/–
 (ஆ) தொழிற்சாலை பயன்பாடு ரூ. 5000/–
 (இ) வணிக பயன்பாடு – ரூ. 7000/–
(இ) சொத்துவரி நிலுவைத் தொகை
(ஈ) நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் (சாலை சீரமைப்பு கட்டணம்)

| | கருங்கல் சல்லிச்சாலை | தார் சாலை | சிமென்ட் சாலை |
|---|---|---|---|
| 0–30 மீட்டர் நீளத்திற்கு | ரூ.1050/– | ரூ.2250/– | ரூ.2600/– |
| 30–90 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 1650/– | ரூ.2850/– | ரூ.3200/– |

(உ) நகராட்சிக்கு செலுத்த வேண்டிய மேற்பார்வைக் கட்டணம் துணை விதிகளில் 15 சதவீதம் எனக் குறிப்பிட்டவாறு கணக்கிட்டு, நகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகை மொத்தம் கணக்கீடு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒவ்வொரு வருடமும் நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய தொகை முந்தைய ஆண்டின் 5 சதவீதம் உயர்த்தப்பட வேண்டும். (ஏப்ரல் 1–ம் தேதி முதல்) விண்ணப்பப் படிவம் எந்த நிதியாண்டில் வழங்கப்பட்டு தொகை செலுத்தப்படுகிறதோ, அந்த நிதியாண்டிற்கான தொகை வசூலிக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புதிய குடிநீர் இணைப்பிற்கான தற்போது நடைமுறையில் உள்ள சென்டேஜ் கட்டணம் குறித்த கட்டண விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| **30 மீட்டர் நீளத்திற்கு** | | | |
|---|---|---|---|
| மண் சாலை | மெட்டல் சாலை | தார் சாலை | சிமென்ட் சாலை |
| ரூ.1220/– | ரூ.1280/– | ரூ. 1495/– | ரூ. 1673/– |
| **90 மீட்டர் நீளத்திற்கு** | | | |
| மண் சாலை | மெட்டல் சாலை | தார் சாலை | சிமென்ட் சாலை |
| ரூ.2424/– | ரூ. 2493/– | ரூ. 2717/– | ரூ. 2896/– |

மேற்கண்ட விபரங்கள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.5718/09/இ2)
**தீர்மானம் எண். 1197 பதிவு செய்யப்பட்டது. எதிர்ப்பு தெரிவித்த திரு.T.A.முனாப், திரு..M.A.R.கலீல் ரகுமான், திரு.யேசுதாசன் ஆகிய மன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.**

**பொருள் எண்.1**

இந்நகராட்சி பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் கீழ்க்கண்ட விவரப்படி தொகை :ரூ. 7667/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர் | பதவி | மாதம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.எஸ், சுதா | நகரமைப்பு ஆய்வாளர் | 1/2010 | 821/– |
| 2 | திரு.எஸ் .ராபின் சுந்தர்சிங் | புள்ளிவிபர குறிப்பாளர் | 1/2010 | 1596/– |
| 3 | திருமதி.அ.நிர்மலா ஜாய் | இளநிலை உதவியாளர் | 1/2010<br>2/2010 | 1045/–<br>2365/– |
| 4 | செல்வி. ஆர். ஹேமா | இளநிலை உதவியாளர் | 1/2010<br>2/2010 | 1045/–<br>795/– |

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.130/2010/அ3)
**தீர்மானம் எண். 1198 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

இந்நகராட்சியில் 01.01.2010 முதல் 31.01.2010 முடிய செலவு செய்யப்பட்ட கீழ்க்கண்ட தலைப்பிலான செலவினச் சீட்டுகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**1. பொதுநிதி செலவு சீட்டுகள்**

688 689 690 691 692 693 694 695 696 697 698 699
700 701 702 703 704 705 708 712 706 707 709 710
711 713 714 715 716 717 718 719 720 721 724 725

**2. குடிநீர் திட்ட நிதி செலவு சீட்டுகள்**

134 135 136 137 138 139 140 141 142 143

**3. M.P, MLA Fund செலவு சீட்டுகள்**

722 723

**அ.குறிப்பு :** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (

ந.க.எண்.6356/08/பி1)

**தீர்மானம் எண். 1199 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 3**

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் வாயிலாக நகராட்சி பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் வருடாந்திர பங்கு தொகையாக ரூ.1999–2000–ம் ஆண்டுக்கு ரூ. 4000/– ம், 2009–2010 ஆம் ஆண்டிற்கு ரூ. 25,000/– ம் செலுத்த கேட்டு கோயம்புத்தூர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
அ.குறிப்பு : மன்றம் தீர்மானிக்கலாம்.
(ந.க.எண்.1542/01/அ1)
**தீர்மானம் எண். 1200 ஒப்புதல் அளித்திட ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 4**

சிறுதொழில் நடைபெறும் மனையிடங்களுக்கு சொத்துவரி விதிப்பில் குடியிருப்புகளுக்கு இணையாக சலுகை வழங்குவது குறித்து இந்நகராட்சிப் பகுதிகளில் சிறு தொழில்களை வகைப்பாடு செய்து அது நியாயமானதாக இருக்கும் பட்சத்தில் மேற்படி சொந்த கட்டிடத்தில் செயல்படும் பட்சத்தில் அதற்கு குடியிருப்புகளுக்கு இணையாக சொத்துவரி விதிக்க நகர்மன்றத்தின் ஒப்புதல் கேட்டு வரப்பெற்ற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
அ.குறிப்பு : மன்றம் தீர்மானிக்கலாம்.

(ந.க.எண். அ2/669/2010)
**தீர்மானம் எண். 1201 ஒப்புதல் அளித்திட ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 5**

குளச்சல் நகரை பிளாஸ்டிக் இல்லாத தூய்மை நகரமாக மாற்றிட இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, புதுடில்லி அவர்களது திருத்தப்பட்ட அறிவிப்பு எஸ்.ஓ.705 (எப்), நாள் 02.09.1999–ன்படி பிளாஸ்டிக்ஸ் தயாரித்தல், விற்பனை மற்றும் உபயோகப்படுத்துதல் விதிகள் 1999–ல் உருவாக்கப்பட்டு பிளாஸ்டிக்ஸ் பொருட்கள் பயன்பாடு வரைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி திடக்கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000–ன்படி திடக்கழிவுகளைக் கையாளுதல் மற்றும் மேலாண்மை ஆகியவை முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி, நகராட்சித் திடக்கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000–ன் அட்டவணை –II வரிசை எண். 1 (3)–ன்படி, கழிவை உருவாக்குபவர் அதனை குப்பையாக வெளியே போடுவதை தவிர்க்கும் பொறுப்புடையவராவார். அவர் அதிகார அமைப்பினால் அறிவிக்கப்பட்ட சேகரித்தல் மற்றும் பிரித்தல் முறைக்கு இணங்க கழிவை ஒப்படைப்பு செய்ய உறுதி செய்ய வேண்டியவராவார்.

இவற்றை செயல்படுத்தவும், நகரில் சாக்கடைத் திட்டம் தங்கு தடையின்றி அமைக்கப்பட்டு செயல்படவும், சுற்றுப்புற சூழ்நிலை பாதிக்காமல் இருக்கவும், பொது சுகாதாரம் சீர்கேடு இல்லாமல் இருக்கும் பொருட்டும் மேற்கண்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு பிளாஸ்டிக்ஸ் தயாரித்தல், விற்பனை மற்றும் உபயோகப்படுத்துதல் இந்நகரில் வரைமுறைப்படுத்தப்படுகிறது. எனவே, கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பிளாஸ்டிக்ஸ் விற்பனையாளர்கள் விற்பனை செய்யவும், வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் பிளாஸ்டிக்ஸ் பயன்படுத்தவும் இதன் மூலம் அறிவிப்பு செய்யப்படுகிறது.

(1) எந்த ஒரு பிளாஸ்டிக் தூக்குப்பையும், அளவில் 8 இஞ்ச் x 12 இஞ்ச் அளவுக்கு குறைவில்லாததாகவும், தடிமனில் 20 மைக்ரான் அளவிற்கு குறைவில்லாததாகவும் இருத்தல் வேண்டும்.

(2) எந்தவொரு விற்பனையாளரும், மறுசுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக் பைகள் அல்லது பிளாஸ்டிக் கவர்களில் அல்லது பிளாஸ்டிக் கொள்கலனில் (Container) உணவுப் பொருட்களை சேமிக்கவோ, கொண்டு செல்லவோ, விற்பனை செய்யவோ அல்லது கட்டிக் கொடுக்கவோ கூடாது.

(3) மேலும் குடிநீர் மற்றும் பிற சூடான மற்றும் சாதாரண அல்லது குளிரான பானங்களை 'ஒருமுறை பயன்படுத்தப்பட்டு பின்பு தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் கோப்பைகள் அல்லது பிளாஸ்டிக் கப்புகள் அல்லது பிளாஸ்டிக் கொள்கலனில் மொத்தமாக விற்பனை செய்வதோ அல்லது சில்லறையாக விற்பனை செய்வதோ அல்லது உபயோகிப்பதோ கூடாது'.

(4)) உணவு பொருட்கள் மற்றும் சிற்றுண்டிகளை கட்டுவதற்கோ அல்லது பரிமாறுவதற்கோ, புதிய அல்லது மறுசுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக்ஸ் தட்டுகளையோ அல்லது பிளாஸ்டிக்ஸ் விரிப்புகளையோ மொத்தமாக விற்பனை செய்யவோ அல்லது சில்லறையாக விற்பனை செய்வதோ அல்லது உபயோகிப்பதோ கூடாது.

(5) ஒவ்வொரு தனிநபர் அல்லது வீடு அல்லது நிறுவனம், தாங்கள் உருவாக்கும் திடக்கழிவுகளிலுள்ள பிளாஸ்டிக்ஸ் கழிவுகளை தனியாகப்பிரித்து நகராட்சியில் அறிவிக்கப்பட்ட நேரத்தில் நகராட்சி சுகாதாரப் பணியாளரிடம் நேரிடையாக ஒப்படைக்க வேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகளை மீறி குளச்சல் நகராட்சி எல்கைக்குள் பிளாஸ்டிக்ஸ் தூக்குப்பைகள், பிளாஸ்டிக்ஸ் கப்புகள், பிளாஸ்டிக்ஸ் விரிப்புகள் முதலியவற்றை மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பனை செய்பவருக்கும் அவற்றை உபயோகிப்பவர்களுக்கும், பிளாஸ்டிக்ஸ் கழிவுகளை தனியாக பிரித்தெடுத்து ஒப்படைக்காத தனி நபர் அல்லது வீடு அல்லது நிறுவனத்திற்கு கீழ்கண்டவாறு அபராதம் விதிக்கப்படுவதுடன் அந்த வியாபாரியிடம் உள்ள அனைத்து பிளாஸ்டிக்ஸ் பைகளும் பறிமுதல் செய்யப்படும்.

இவ்வுத்தரவு உடனடியாக அமுலுக்கு வருகின்றது

| | |
|---|---|
| மொத்த விற்னையாளருக்கு அபராதம் | = ரூ. 1,000 |
| சில்லறை வியாபரிகளுக்கு அபராதம் | = ரூ. 500 |
| உபயோகிப்பவர்களுக்கு அபராதம் | = ரூ. 100 |
| பிளாஸ்டிக்ஸ் கழிவுகளை பிரித்து ஒப்படைக்காத நிறுவனங்கள் | = ரூ. 100 |
| பிளாஸ்டிக்ஸ் கழிவுகளை பிரித்து ஒப்படைக்காத தனி நபர்/வீடுகள் | = ரூ. 25 |

பறிமுதல் செய்யப்படும் பிளாஸ்டிக்ஸ் பைகள் உடனடியாக வெட்டப்பட்டோ அல்லது கிழிக்கப்பட்டோ, நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை உரக்கிடங்கில் சேமிக்கப்பட்டு இறுதியாக சிமெண்ட் ஆலைகளில் ஊடு எரிபொருளாக பயன்படுத்த அல்லது மாசு கட்டுப்பாட்டு வாரிய வழிமுறையின்படி அப்புறப்படுத்தப்படும். மேற்கண்டவைகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு.:-** இந்நகராட்சியின் சுகாதார நலன் கருதி 01–04–2010 முதல் பிளாஸ்டிக் இல்லாத தூய்மையான நகரமாக அறிவித்து, அமுல்படுத்த உள்ளதால் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.4596/2009/எச்1)

**தீர்மானம் எண். 1202 ஒப்புதல் வழங்கிட ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 6**

நகராட்சி பகுதிகளில் பாலித்தின் குப்பைகளை அகற்றிட விழிப்புணர்வு பிரச்சார ஆடல், பாடல் மற்றும் தெருமுனை நாடகங்களின் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த நெல்லை ரவி முத்து அவர்களின் கலைக் குழுவினரை பயன்படுத்திக் கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் மூ.மு.எண்.6276/09/அ4 நாள் 04.12.2009–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்நகராட்சிப் பகுதிகளில் பாலித்தின் குப்பைகளை அகற்றுவதற்கு விழிப்புணர்வு பிரச்சார ஆடல், பாடல் மற்றும் தெருமுனை நாடகங்களை ஒரே நாளில் பல தெரு முனைகளில் நடத்திட வாய்ப்பு வழங்கக் கேட்டு நெல்லை ரவி முத்து அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. அதற்கான செலவுத் தொகை குறித்த விவரம் கேட்கப்பட்டதற்கு நாள் ஒன்றிற்கு 3 நிகழ்ச்சிகளுக்கு ரூ. 10,000/– ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது

அ.குறிப்பு : மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.3619/02/எச்1)

**தீர்மானம் எண். 1203 இரண்டு நாட்கள் நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ரூ.20,000/– அனுமதிக்கப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 7**

குளச்சல் நகராட்சி சிங்கன்காவு சாலையில் ஒற்றைக்கண் பாலம் முதல் சிங்கன்காவு கிணறு வரை மேல் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைக்கும் பணியினை செய்வதற்கு ரூ.9,00,000/– ம் மதிப்பீட்டிற்கு குளச்சல் நகர்மன்றம் தனது தீர்மான எண்.947 நாள் 31.07.2009–ல் ஒப்புதல் வழங்கி உள்ளது. அதன்படி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒப்பந்ததாரர் திரு.ரெக்சலின்ஜோஸ் என்பவர் 4.96% மதிப்பீட்டைவிட அதிகமாக கோரிய ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்றம் தனது தீர்மான எண்.1000 நாள் 29.09.2009–ல் ஒப்புதல் வழங்கி உள்ளது. அதன்படி மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டு ரூ.9,22,479/– க்கு பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. ஆகவே பணி செய்த மொத்தத் தொகையான ரூ. 9,22,479/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் இதில் மானியத் தொகை ரூ.9,00,000/–ம் போக மீதம் உள்ள தொகை ரூ. 22,479/–ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து ஒப்பந்ததாரருக்கு வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2305/09/இ1)

**தீர்மானம் எண். 1204 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 8**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN.74 Z 8931 லாரியின் மின்கலம் பழுதடைந்து விட்டதால், பொது சுகாதார நலன் கருதி அதனை மாற்றி புதிய மின்கலம் பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவு ரூ. 5000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4739/08/எச்1)

**தீர்மானம் எண். 1205 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 9**

இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் வீடு வீடாக சென்று குப்பைகளை சேகரிப்பதற்காக பயன்படுத்தப்பட்டு வந்த 6 தள்ளுவண்டிகள் (Wheel Barrows) பழுதடைந்து விட்டதால், பொது சுகாதார நலன் கருதி அவைகளை உடனடியாக சரி செய்வதற்கு ஆகும் உத்தேச செலவு ரூ. 4500/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4805/07/எச்1)

**தீர்மானம் எண். 1206 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 10**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பகுதிகளான

(1) ஜேம்ஸ் மருத்துவமனை சந்திப்பு
(2) தினசரி சந்தை – SSN வளாகம் அருகில்
(3) மரமடி பஸ் நிறுத்தம் அருகில்
(4) காணிக்கை மாதா வணிக வளாகம் அருகில்
(5) மாதாகாலனி திருப்பு (மெயின் ரோடு)
(6) காந்தி சந்திப்பு

ஆகிய பொது இடங்களில் மக்களுக்கு சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய Flex Board–கள் 6 எண்ணங்கள் 3' x 2' அளவில் வைப்பதற்கு 2007–08–ம் ஆண்டைய SJSRY திட்டத்தின் சமுதாய அமைப்பிற்கான விழிப்புணர்வு பிரிவின்கீழ் இந்நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.14,400/–ஐ பயன்படுத்திக் கொள்ள இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 1021 நாள் 15.10.2009–ன் மூலம் ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ள 6 போர்டுகளையும் மேற்படி இடங்களில் கான்கிரீட் அடித்தளம் அமைத்து நடுவதற்கான உத்தேச செலவு தொகை ரூ. 4500/– க்கு மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.6536/08/எச்1)

**தீர்மானம் எண். 1207 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 11**

குளச்சல் நகராட்சியின் பொது சுகாதார பணிகளுக்காக தினக்கூலி அடிப்படையில் பணிபுரிய 15 தற்காலிக துப்புரவு பணியாளர்கள் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண். 3396/2005/அ4 நாள் 19.12.2005 –ன்படி தற்காலிக பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வந்தனர். ஆனால் 02.06.2008 முதல் 10 துப்புரவு பணியாளர்கள் மட்டுமே தற்காலிக துப்புரவு பணியாளர்களாக பணிபுரிய அனுமதிக்கப்பட்டு பணிபுரிந்து வந்த நிலையில் நகராட்சியின் தரம் முதல் நிலையாக உயர்த்தப்பட்டுள்ளதாலும், இந்நகராட்சியின் நிரந்தர துப்புரவு பணியாளர்கள் 48 பேரில் 22 பணியாளர்கள் தெருவிளக்கு பராமரிப்பு, குடிநீர் வினியோகம், தகவல் மையப் பணி, ஓட்டுநர் பணி, அலுவலக காவலர் மற்றும் அலுவலக இருக்கை பணிகளில் மாற்று பணியாளர்களாக ஈடுபடுத்த.ப்பட்டுள்ளதாலும், சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுகாதாரப் பணிகள் முழுமையாக செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாலும், மாவட்ட ஆட்சியரின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயல்முறை ஆணையின்படி ஏற்கனவே பணிபுரிந்து வந்த 10 தற்காலிக துப்புரவு பணியாளர்களுடன் 5 தற்காலிக துப்புரவு பணியாளர்களை மீண்டும் தற்காலிகமாக பணி நியமனம் செய்து ஊதியம் வழங்க இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 1025 நாள் 15.10.2009–மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்படி பணியிட அனுமதி 28.02.2009 –வுடன் முடிவடைந்த நிலையில் மேற்காணும் பணியிடங்களை தொடர்ந்து நீட்டித்தால் தணிக்கைத் தடையும், இந்நகராட்சியின் பொது நிதிநிலை திருப்திகரமானதாக இல்லாததால் நிர்வாக சிக்கலும் எழக்கூடும். எனவே 28.02.2010–வுடன் இப்பணியிடங்களை முடித்துக் கொள்ள மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2764/05/எச்1)

**தீர்மானம் எண். 1208 – இந்நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட 50 துப்புரவுப் பணியாளர் பணியிடங்களில் 3 பணியிடங்கள் காலியாக உள்ளன. குடிநீர் வினியோகம், இரவு காவலர், வரிவசூல், அலுவலக உதவியாளர் ஆகிய வேலைகளை செய்வதற்கு பணிக்கப்பட்ட பணியாளர்கள் போக 25 பணியாளர்கள் மட்டும் சுகாதாரப் பணியினை மேற்கொண்டுள்ளதாலும், "குப்பைத்தொட்டி இல்லா குளச்சல் நகரத் திட்டம் " மூலம் வீடு வீடாகச் சென்று குப்பைகள் சேகரிக்கப்படுவதாலும், பிளாஸ்டிக் குப்பைகள் இல்லாத நகரமாக குளச்சல் நகரம் மாற்றம் பெற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாலும், தொடர்ந்து 10 தினக்கூலிப் பணியாளர்களின் பணிக்காலத்தினை 31.05.2010 வரை நீட்டித்திட ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 12**

இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, குடிநீர் கட்டணம் நிலுவை வரியை செலுத்தக் கோரி பத்திரிகையில் விளம்பரம் செய்த வகையில் கீழ்கண்ட விவரப்படி, அதற்கான தொகையை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

| | | |
|---|---|---|
| தினத்தந்தி | – | ரூ. 896/– |
| தினகரன் | – | ரூ. 840/– |
| தினமலர் | – | ரூ. 1040/– |
| | | ரூ.2786/– |

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.4826/ 07/அ1)

**தீர்மானம் எண். 1209 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 13**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட, ஆசாத்நகர் பகுதியில் காரிதாஸ் காலனி மற்றும் KSSS காலனி ஆகிய இடங்களில் தேங்கியுள்ள கழிவுநீரை 5000 லிட்டர் கொள்ளளவு கொண்ட கழிவுநீர் உறிஞ்சு லாரி மூலம் உறிஞ்சி அப்புறப்படுத்துவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | M/s.உதய கண்ணா ஏர் கம்ப்ரசர் செப்டிக் டேங்க் கினீனிங், நாகர்கோவில். | 6.67% மதிப்பீட்டை விட அதிகம் ( ரூ. 25,600.00) |
| 2 | M/s.உதய குமார் ஏர் கம்ப்ரசர் செப்டிக் டேங்க் கிளீனிங், நாகர்கோவில். | மதிப்பீட்டு விகிதம் ( ரூ. 24,000.00) |

இதில் M/s.உதய குமார் ஏர் கம்ப்ரசர் செப்டிக் டேங்க் கினீனிங் நிறுவனம் மதிப்பீட்டு விகிதத்திற்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளது. இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.
அ.குறிப்பு : மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.
(ந.க.எண்.4683/2007/இ1)

**தீர்மானம் எண். 1210 குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. M/s.உதய குமார் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கிட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 14**

குளச்சல் நகராட்சி எல்லைக்குட்பட்ட, மார்கெட் பின்புறம் உள்ள 5" சுவிஸ் வால்வு, டாக்சி ஸ்டான்ட் அருகில் உள்ள 3" வால்வு, பீச் ரேசன் கடை பக்கம் 3" சுவிஸ் வால்வு, காந்தி ஜங்சனில் 5" PVC line உடைவு, பாலத்தன்கரை சம்பில் உள்ள 5" PVC line –ல் கிணறு Bore–ல் இருந்து வரும் லைன் உடன் இணைக்கவும் ரூ.46,000/–க்கு மதிப்பீடு தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.
அ.குறிப்பு : மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
(ந.க.எண்.329/10/இ1)

**தீர்மானம் எண். 1211 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 15**

குளச்சல் நகராட்சி எல்லைக்குட்பட்ட காந்தி முக்கில் 5" PVC Supply line உடைவு, பீச் கோவில் முன் 4" PVC Supply line உடைவு ஆகிய உடைவுகளை சரி செய்வதற்கும், அதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 5000/– க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 1212 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 16**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அந்தோணியார் காலனியில், 2" ஜி.ஐ.பைப் லைன் உடைவு, பாலத்தன்கரை சம்பு அருகில் ஜி.ஐ.பென்ட் உடைவு, பீச் சொசைட்டி முன் கழிவறை செல்லும் லைன் உடைவுகளை சரி செய்யவும், அதற்குண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ. 5000/–க்கும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 1213அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 17**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட, மாலவிளை நாராயணசுவாமி கோவில் அருகில் க.எண்.1/54–3 முன் 2" லைன் உடைவு, ஈஸ்வரி ஹோட்டல் முன் 2" லைன் உடைவு மற்றும் சாம்பசிவபுரம் கழிவறையில் புதிதாக

பைப் போட்டு சரி செய்தல், ஆகிய பணிகளை செய்வதற்கும், அதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைரூ.2600/—க்கும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 1214 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 18**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட, வெள்ளிப்பிள்ளையார் கோவில் பக்கம் 4" பம்பிங் லைன் உடைவு, கண்ணன் மருத்துவமனை முன் 3" லைன் உடைவுகளை சரி செய்வதற்கும், அதற்குண்டான மதிப்பீட்டுத் தொகைரூ.3800/—க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண். 1215 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 19**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட, பள்ளி முக்கு அருகில் மாதாகாலனி 4" பம்பிங் லைன், மெயின் ரோட்டில் லோப்பஸ் மண்டபம் அருகில் 5" சப்ளை லைன் உடைவுகளை சரி செய்யவும், அதற்குண்டான மதிப்பீட்டுத் தொகைரூ.4800/—க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண். 1216 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 20**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட, பீச் திருப்பில் 4" லைன் உடைவு, கொட்டில்பாடு டிரான்ஸ்பார்மர் அருகில் 4" லைன் உடைவு, பீச் கோவில் முன் 4" லைனில் T.Joint உடைவு – ஆகிய உடைவுகளை சரி செய்வதற்கும், அதற்குண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ.5000/—க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 1217 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 21**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட, ஏசுதாஸ் காலனியில் 3" லைனில் அடைப்பு சரி செய்யவும், சாம்பசிவபுரம் பாலம் அருகில் 4" சப்ளை லைனில் End Cap போடவும், அதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4000/—க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 1218 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 22**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட, ஏசுதாஸ் காலனியில் 4" லைன் உடைவு, ஜோசப் பெனடிட் காலனி பாலம் அருகில் 2" லைன் உடைவு, மரமடி கழிவறையில் 3/4 " லைன் உடைவுகளை சரி செய்யவும், அதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3600/—க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 1219 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 23**

குளச்சல் நகராட்சி எல்கைக்குட்பட்ட, துறைமுகத்தெருவில் கதவு எண்.11/45—ன் அருகில் லைன் உடைவு, கதவு எண்.18/16—ன் முன் லைன் உடைவுகளை சரி செய்வதற்கும், அதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4300/—க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 1220 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 24**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட, அந்தோணியார் காலனியில் 2" பிவிசி லைன் உடைவு, Beach—ல் 4" பம்பிங் லைன் உடைவு, சாஸ்தாங்கரையில் கதவு எண்.17/166—ன் அருகில் 3" பிவிசி சப்ளை லைன் உடைவுகளை சரி செய்வதற்கும், அதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4500/—க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 1221 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 25**

இந்நகராட்சியில் இயங்கி வரும் Copier machine (Xerox) க்குரிய Toner Cartridge வாங்க விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காண்டவாறு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | விலைப்புள்ளி அளித்தவரின் பெயர் மற்றும் முகவரி | எண்ணம் | தொகை |
|---|---|---|---|
| 1 | Sakthi Copier,<br>17/S .Perumal South car Street, Tirunelveli. | 1 Kg, | 2700 |
| 2 | Oor yes Technologies,<br>68/E, Sanyasi Gramam, Tirunelveli. | 1 Kg, | 3150 |
| 3 | Friends Graffx Copier Service,<br>7A. Classic Complex, 181, Balamore Road, Nagercoil. | 1 Kg, | 2500 |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் Friends Graffx Copier Service, Nagercoil நிறுவனத்தார் குறைந்த விலைப்புள்ளியாக ஒரு Cartridge ரூ.2500/– க்கு அளித்துள்ளார் என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண். 1222 குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.Friends Graffx Copier Service, நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 26**

இந்நகராட்சியில் 12.03.2010 வெள்ளிக்கிழமை அன்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ள துப்புரவு பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கான மருத்துவ முகாம் மற்றும் நகராட்சிப் பகுதியில் பிளாஸ்டிக் பொருட்களை தடை செய்வது தொடர்பான நிகழ்ச்சிகளுக்கு தேவையான ஏற்பாடுகளை செய்வதற்கான உத்தேசச் செலவுத் தொகை ரூ.30,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண். 1223 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 27**

நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.25344/2009/புதிபி நாள் 16.02.2010–ல், போக்குவரத்து மேலாண்மை திட்டத்தின்கீழ் ரூ.77.90 லட்சம் மதிப்பீட்டில் திட்ட பிரேரணை அனுப்பியதில் நகர் ஊரமைப்பு வாரிய நிதியிலிருந்து மேலாண்மை திட்டத்தின்கீழ் ரூ. 25.00 லட்சம் அதிகமாக வழங்க இயலும் என்றும், மீதமுள்ள தொகையினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் என்பதற்கான திருத்திய மன்ற தீர்மானத்துடன் மீள அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பணி CRZ பகுதியில் அமைவதை தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது குறித்து மன்றத் தலைவருடன் ஆலோசனை மேற்கொண்டதில் ஏற்கனவே நகர்மன்றத் தீர்மான எண். 1082 நாள் 06.11.2009 மூலம் தேர்வு செய்த பணிகளில் VKP பள்ளி முதல் T.S. சந்திப்பு வரை மழைநீர் வடிகால் ஓடையுடன் கூடிய நடைபாதை அமைக்கும் பணி தற்போது மாநில நெடுஞ்சாலைத் துறையின் மூலம் நடைபெற உள்ளதால், மேற்கண்ட தீர்மானத்தினை ரத்து செய்து கீழ்கண்ட பணியினை தேர்வு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது.

பீச் சந்திப்பு முதல் காந்தி சந்திப்பு வரையில் கிழக்கு பகுதியில ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால் ஓடையின் மேல் நடைபாதைக்குரிய Tiles மற்றும் கைப்பிடி அமைத்தல் மற்றும் குளச்சல் பிரதான சாலையில் காந்தி சந்திப்பு முதல் நகராட்சி அலுவலகம் முன்பு வரை தெற்கு பகுதியில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் , Tiles மற்றும் கைப்பிடியுடன் கூடிய நடைபாதை அமைத்தல் – மதிப்பீட்டுத் தொகை ரூ. 33.00 லட்சம்.

மேற்கண்ட பணி CRZ பகுதியில் வருவதால் அதற்கு DCMA அனுமதி பெற்று திட்ட பிரேரணை அனுப்புவதற்கும், திட்ட ஒதுக்கீட்டு தொகை ரூ.25.00 லட்சம் போக மீதி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.4585/09/இ1)

**தீர்மானம் எண். 1224 ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 28**

அரசாணை எண்.143 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 20.05.2002–ல் குளச்சல் நகராட்சியில் புராதன நகர மேம்பாட்டு திட்டப் பணிகளை மேற்கொள்ள ரூ. 50.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் செயலாணையில் ரூ. 30.00 லட்சம் மதிப்பீட்டில் குளச்சல் நகராட்சியில் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நகர் ஊரமைப்பு இயக்குனர், சென்னை அவர்களின் கடிதத்தில் மீதமுள்ள தொகை ரூ.20.00 லட்சத்திற்கு திட்ட பிரேரணை அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது. மேலும் பணி CRZ பகுதியில் வருவதை தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து நகர்மன்றத் தலைவருடன் ஆலோசனை மேற்கண்டதில் கீழ்கண்ட பணியினை தேர்வு செய்யுமாறு முடிவு செய்யப்பட்டது.

குளச்சல் பீச் சந்திப்பு முதல் காந்தி சந்திப்பு வரையில் மேற்கு பகுதியில ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால் ஓடையின் மேல் நடைபாதைக்குரிய Tiles மற்றும் கைப்பிடி அமைத்தல் மற்றும் காந்தி சந்திப்பு முதல் நகராட்சி அலுவலகம் வரை மழைநீர் வடிகால் ஓடை மற்றும், Tiles மற்றும் கைப்பிடியுடன் கூடிய நடைபாதை அமைத்தல் – மதிப்பீட்டுத் தொகை ரூ. 30.00 லட்சம்.

இதில் திட்ட ஒதுக்கீட்டு தொகை ரூ.20.00 லட்சம் போக மீதி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மேற்கண்ட பணி CRZ பகுதியில் வருவதால் அதனை DCMA அனுமதி பெற்று திட்ட பிரேரணை அனுப்புவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.722/10/இ1)

**தீர்மானம் எண். 1225 ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 29**

குளச்சல் நகராட்சி எல்கைக்குட்பட்ட, ஆறுமுகம் லாட்ஜ் முதல் அரசு மருத்துவமனை அருகில் வரை 6 " விட்டமுள்ள ஏ.சி. குழாய் உள்ளது. அவற்றை அமைத்து 22 ஆண்டுகளுக்கு மேலாகி உள்ளது. அதில் தற்போது அடிக்கடி உடைப்புகள் ஏற்படுகிறது. இதனால் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுவதுடன் சாலையும் சேதம் அடைந்து வருகிறது. இதனால் ஏற்படும் செலவுகளை தவிர்ப்பதற்கும், மேற்கண்ட இடத்தில் புதிய பிவிசி குழாய் அமைக்குமாறும், நகர்மன்றத் தலைவர் அறிவுறுத்தியதின் அடிப்படையில் ஆறுமுகம் லாட்ஜ் முதல் அரசு மருத்துவமனை அருகில் வரை 6" விட்டமுள்ள பிவிசி குழாய் அமைப்பதற்கும், அதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 2,40,000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண். 1226 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 30**

இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், குத்தகை, கடை வாடகை மற்றும் இதர லைசென்ஸ் கட்டணங்கள் செலுத்தக் கோரி பொதுமக்களுக்கு தெரியப்படுத்த 11.03.2010 முதல் 31.03.2010 வரை இந்நகர் முழுவதும் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்திட உத்தேசச் செலவு ரூ.20,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.அ1/4826/07)

**தீர்மானம் எண். 1227 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 31**

குளச்சல் ஆராய்ச்சி மணி, மக்கள் நல இயக்க செயலாளர் அவர்கள் குளச்சல் நகர் மன்றத்தில் தீர்மானம் கொண்டு வர கேட்டுள்ளார்கள்.

(1) குளச்சல் அண்ணாசிலை பகுதியில் தென்கிழக்கில் திரு.மோட்சக்கண் நாடார் அவர்கள் மகன்களின் கட்டிடங்களின் முன்பகுதி சென்ட்ரல் லாட்ஜ் முன்புறம் மற்றும் தேவி மாவு மில் முன்புறம் வரையுள்ள பகுதியை NO PARKING – பகுதியாக அறிவிக்க வேண்டும். அவ்வாறாயின் மிகவும் நெருக்கடியான அப்பகுதியில் போக்கு வரத்து சீர் செய்யப்பட்டு, மக்கள் அச்சமின்றி நடமாட ஏதுவாகும். அதுபோல் ஆலமூடு கோவில் பகுதிகளை சுற்றியும் NO PARKING AREA –வாக அறிவிக்க வேண்டும் எனவும்,

(2) குளச்சல் காந்தி ஜங்சனில் ரவுண்டான அமைத்து, பாதுகாப்பான போக்குவரத்திற்கு உறுதி செய்ய வேண்டும் என கேட்டு தீர்மானம் கொண்டு வருமாறு குளச்சல் நகராட்சிக்கு ஆராய்ச்சி மணி மக்கள் நல இயக்கம் கேட்டுக் கொண்டுள்ளது. இது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 1228 பொருளில் கொடுக்கப்பட்டுள்ள துணைப் பொருட்கள் (1) மற்றும் (2) ஆகிய இனங்கள் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு மேல்நடவடிக்கை மேற்கொண்டிட தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) ஜே. ஜேசையா,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர் (பொ)
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2010 மார்ச் திங்கள் 30.03.2010–ம் நாள் செவ்வாய்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.

***முன்னிலை***

திரு.ஜே.ஜேசையா,பி.எஸ்ஸி., டி.பி.எம்.,
நகர்மன்ற தலைவர்.

**பொருள் எண் : 1**

இந்நகராட்சியில் 01.02.2010 முதல் 28.02.2010 முடிய செலவு செய்யப்பட்ட கீழ்க்கண்ட தலைப்பிலான செலவினச் சீட்டுகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**1. பொதுநிதி செலவுச் சீட்டுகள்**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 726 | 727 | 728 | 729 | 730 | 731 | 732 | 733 | 734 | 735 | 736 | 737 |
| 738 | 739 | 740 | 741 | 742 | 743 | 744 | 745 | 746 | 747 | 748 | 749 |
| 750 | 751 | 752 | 753 | 754 | 755 | 756 | 757 | 758 | 759 | 762 | |

**2. குடிநீர் திட்ட நிதி செலவு ச் சீட்டுகள்**

144 145 146 147 148 149 150 151 152

**3. IDSMT Fund செலவுச் சீட்டுகள்**

760 761

**அ.குறிப்பு :** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (

ந.க.எண்.6356/08/பி1)

**தீர்மானம் எண். 1229 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

இந்நகராட்சி பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் கீழ்க்கண்ட விவரப்படி தொகை :ரு. 3299/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர் | பதவி | மாதம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திரு.வெ.கண்ணையா | நகராட்சி பொறியாளர் | 1/2010 | 2647/– |
| 2 | திருமதி. எஸ், சுதா | நகரமைப்பு ஆய்வாளர் | 2/2010 | 652/– |

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.130/2010/அ3)

**தீர்மானம் எண். 1230 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 3**

இந்நகராட்சி 23–வது வார்டில் சிங்கன்காவு சாலையில் இருந்து தைநாத்தங்கரை காலனிக்கு செல்லும் இணைப்பு சாலை வீ.எண். 28/72 A வரை அமைக்கப்பட்டுள்ளது. தற்போது வீ.எண். 28/72 A அருகில் சிறுபாலம் அமைத்து தரும்படி நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை விடுத்துள்ளார். ஆகவே அதன் அருகில் சிறுபாலம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகர்மன்றத் தலைவர் அவர்கள் அறிவுறுத்தியதன் அடிப்படையில் தளம் ஆய்வு மேற்கொண்டு சிறுபாலம் அமைக்க ரூ. 65,000/–க்கு மதிப்பீடு தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் முடிவு செய்யலாம்.
(ந.க.835/2010/இ1)

**தீர்மானம் எண். 1231 ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 4**

இந்நகராட்சிக்கு சொந்தமான பேரூந்து நிலையத்தில் மெடிக்கல் ஸ்டோர் அருகில் படிக்கட்டு கட்டுதல் மற்றும் பேரூந்து நிலைய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அருகில் பள்ளமாக இருக்கும் இடத்தில் கான்கிரீட்

தளம் அமைக்கும் பணிக்கு 23.01.2010–ல் மறு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | திருஎஸ். டேவிட்ராஜ் | 7.24% மதிப்பீட்டைவிட அதிகம்(ரூ.24946.00) |
| 2. | திரு.பி. தங்கமணி | 4.94% மதிப்பீட்டைவிட அதிகம்(ரூ.24412.15) |

இதில் இரண்டு ஒப்பந்ததாரர்களும் மதிப்பீட்டைவிட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளனர். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.பி.தங்கமணி என்பவர் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக 4.94% மதிப்பீட்டைவிட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

அதனையடுத்து, ஒப்பந்தக்காரர் திரு.பி. தங்கமணி என்பவருக்கு NEGOTIATION அறிவிப்பு அனுப்பப்பட்டதில், திரு.பி. தங்கமணி என்பவர் மேற்படி பணியினை மதிப்பீட்டு விலை விகிதத்தில் செய்து தருவதாக 10.03.2010–ல் எழுத்து மூலம் தெரிவித்துள்ளார். இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.5625/09/இ1)

**தீர்மானம் எண். 1232 மதிப்பீட்டு விலை விகிதத்தில் வேலை செய்திட ஒப்புக்கொண்டுள்ள திரு.பி.தங்கமணி என்பவருக்கு வேலை உத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 5**

இந்நகராட்சிக்குட்பட்ட செக்காலத் தெருவில் உள்ள சத்துணவுக்கூட மராமத்து பணியினை செய்வதற்கு 28.01.2010–ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.பி. தங்கமணி | 7.29% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.28140.00) |
| 2. | திரு.எஸ். டேவிட்ராஜ் | 4.93% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.27522.00)) |

இதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகமாக உள்ளன. பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக திரு.எஸ்.டேவிட் ராஜ் என்பவர் 4.93% மதிப்பீட்டை விட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

இதன் மீது ஒப்பந்ததாரர் திரு.எஸ்.டேவிட்ராஜ் என்பவருக்கு NEGOTIATION அறிவிப்பு அனுப்பியதில், திரு.எஸ்.டேவிட்ராஜ், ஒப்பந்ததாரர் 10.03.2010–ல் மேற்படி பணியினை மதிப்பீட்டு விலை விகிதத்தில் செய்து தருவதற்கு சம்மதக் கடிதம் கொடுத்துள்ளார். எனவே இது குறித்து மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.3730/09/இ1)

**தீர்மானம் எண். 1233 மதிப்பீட்டு விகிதத்தில் வேலை செய்திட ஒப்புதல் கொடுத்துள்ள திரு.எஸ். டேவிட்ராஜ் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கிட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 6**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட மரமடி குருசடி அருகில் பாலம் மற்றும் குருசடியினை இணைக்கும் சாலையின் ஓரத்தில் தடுப்பு சுவர் மற்றும் சாலையினை விரிவுபடுத்தி சிமெண்ட் தளம் அமைக்கும் பணியினை செய்வதற்கு 28.01.2010–ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.எஸ். டேவிட்ராஜ் | 4.94% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.66686. 90) |
| 2. | திரு.பி. தங்கமணி | 5.12% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.66800.90)) |

இதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகமாக உள்ளன. பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக திரு.எஸ்.டேவிட் ராஜ் என்பவர் 4.94% மதிப்பீட்டைவிட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

அதனையடுத்து ஒப்பந்ததாரர் திரு.எஸ்.டேவிட்ராஜ் என்பவருக்கு NEGOTIATION அறிவிப்பு அனுப்பியதில், இவர் மேற்படி பணியினை மதிப்பீட்டு விலை விகிதத்தில் செய்து தருவதற்கு 10.03.2010–ல் எழுத்து மூலம் தெரிவித்துள்ளார். இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.5531/09/இ1)

**தீர்மானம் எண். 1234 மதிப்பீட்டு விகிதத்தில் வேலை செய்திட ஒப்புதல் கொடுத்துள்ள திரு.எஸ். டேவிட்ராஜ் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 7**

இந்நகராட்சிக்குட்பட்ட 6 இடங்களில் பொது மக்களுக்கு சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தும் வாசகங்கள் அடங்கிய Flex Board –கள் 6 எண்ணங்களை அதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களில் காங்கிரீட் அடித்தளம் அமைத்து நடுவதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ. 4500/–க்கு மன்றம் தனது தீர்மானம் எண். 1207 நாள் 11.03.2010–ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் கோரப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர்<br>ஒப்பந்ததாரர், குளச்சல் நகராட்சி | ரூ. 800/– | 1 எண்ணம் |
| 2. | திரு.எஸ். டேவிட்ராஜ்<br>ஒப்பந்ததாரர், குளச்சல் நகராட்சி | ரூ. 750/– | 1 எண்ணம் |

அ.குறிப்பு : மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.6536/08/எச்1)

**தீர்மானம் எண். 1235 குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எஸ். டேவிட்ராஜ் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கிட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 8**

குளச்சல் நகராட்சி அலுவலகத்திற்கு தண்ணீர் வருகிற லைன் மெயின் ரோட்டில் அடிக்கடி உடைவு ஏற்படுகிறது. அதனால் சாலை சேதமடைவதுடன் குடிநீர் வினியோகமும் பாதிப்படைகிறது. ஆகவே அதனை சரி செய்வதற்கு அதில் 2" விட்டமுள்ள ஜி.ஐ. கவரிங் பைப் அமைத்து புதிய லைன் அமைப்பதற்கும், இரண்டு இடங்களில் ஏற்பட்ட உடைவுகளை சரி செய்வதற்கும், சேதமடைந்த சாலையை சரி செய்வதற்கும், அதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 15,000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.946/10/இ1)

**தீர்மானம் எண். 1236 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 9**

இந்நகராட்சி வி.கே.பி. பள்ளி அருகில் உள்ள போர் எண். 11 மோட்டாரில் இருந்து அலுவலக வளாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு 5" விட்டம் உடைய பம்பிங் மெயின் மூலம் பம்பிங் செய்யப்படுகிறது. இதனால் இந்த பம்பிங் குழாய் அடிக்கடி உடைவு ஏற்படுகிறது. இதனை தவிர்க்க சீம்பிளிவிளை ஆழ்துளை கிணறு எண். 12 அருகில் 6" விட்டம் உடைய பம்பிங் குழாயுடன் இணைத்தால் பம்பிங் உடைவு தவிர்க்கப்படும். ஆகவே மேற்க்கண்ட இடத்தில் 3" பைப் லைன் 35 மீட்டர் நீளத்தில் அமைத்தும், 3" சுலுயிஸ் வால்வு 2 எண்ணம் மாட்டுவதற்கும், அதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 20,000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.982/10/இ1)

**தீர்மானம் எண். 1237 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 10**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட காமராஜர் சாலைக்கு செல்லும் குழாயில் அடைப்பு ஏற்பட்டுள்ளதால் குடிநீர் வினியோகம் பாதிப்படைந்துள்ளது. ஆகவே அச்சாலையில் மார்க்கெட் சாலை, காமராஜர் சாலை

சந்திப்பில் 2 இடங்களிலும், வண்ணாத்திவிளை சந்திப்பிலும், ஓரியண்ட் பள்ளிக்கூடம் அருகில், நரிக்கல் சந்திப்பில் கிழக்குப்புறம் 1 இடம் மற்றும் கோயில் சந்தி.பில் ஒரு இடம் ஆகிய இடங்களில் தோண்டி அடைப்பினை சரி செய்வதற்கும், அதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 14,000/—க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.947/10/இ1)

**தீர்மானம் எண். 1238 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 11**

இந்நகராட்சி புதிய சிங்காரவேலன் காலனியில் ஒரு பகுதி தண்ணீர் சரிவர செல்லாமல் உள்ளது. ஆகவே நீர்த்தேக்கத் தொட்டி அருகில் ஏற்கனவே இருந்த 2" ஜி.ஐ. பைப்புகள் மற்றும் பிவிசி பைப்புகளை மாற்றி 3" ஜி.ஐ. பைப்புகளாக மாற்றியும், 3" மற்றும் 2" Sluice வால்வுகள் அமைப்பதற்கும், அதற்காகத் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.20,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.981/10/இ1)

**தீர்மானம் எண். 1239 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 12**

குளச்சல் நகராட்சியில் தற்போது புதிய குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் 2009—10—ம் ஆண்டிற்காக பைப்புகளின் விலைப்பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதில் கீழ்க்கண்ட பொருட்களுக்கு அதன் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு :

| வ.எண். | பொருட்களின் விவரம் | யூனிட் | 15 mm விட்டம் | 20 mm விட்டம் |
|---|---|---|---|---|
| 1 | ஜி.ஐ. பைப் | 1 மீ | 82.00 | 108.00 |
| 2 | ஜி.ஐ. கப்.பிளி.ங் | 1 எண்ணம் | 13.00 | 14.00 |
| 3 | ஜி.ஐ.எல்போ | " | 16.00 | 21.00 |
| 4 | ஜி.ஐ.பெண்ட் | " | 14.00 | 24.00 |
| 5 | ஜி.ஐ. டீ (Tee) | " | 23.00 | 29.00 |
| 6 | ஜி.எம். மெயின் காக் | " | 168.00 | 194.25 |
| 7 | வாட்டர் மீட்டர் | " | 509.25 | 750.75 |
| 8 | ஜி.ஐ.ரெடியூசர் 3/4" x ½" | " | 14.70 | 14.70 |
| 9 | புளோ கண்ட்ரோல் வால்வு | " | 131.25 | 157.50 |
| 10 | சி.ஐ. சர்பேஸ் பாக்ஸ் | " | 210.00 | 210.00 |
| 11 | ஜி.ஐ. சாடில் | " | 86.36 | 86.36 |
| 12 | மேசன்டிரி சேம்பர் | " | 682.50 | 682.50 |
| 13 | ஜி.எம். வீல் வால்வு | " | 250.00 | 279.00 |
| 14 | எம்.எஸ். கிளாம்பு | " | 5.25 | 6.30 |
| 15 | ஜி.எம். செக் வால்வு | " | 82.95 | 92.40 |
| 16 | சி.ஐ.செக் நெட் | " | 9.00 | 12.00 |
| 17 | ஜி.ஐ.பெரூல் | " | 227.00 | 341.00 |
| 18 | ஜி.ஐ.நிப்பிள் | " | 30.45 | 30.45 |
| 19 | ஜி.ஐ.யூனியன் | " | 43.00 | 44.00 |
| 20 | ஜி.ஐ.பைப் பதித்தல் | 1 மீ | 10.50 | 10.50 |
| 21 | ஜி.ஐ. பைப் மரை போடுத்ல் | 1 எண்ணம் | 6.00 | 6.15 |
| 22 | பெரூல், சாடில் .யூனியன் பொருத்துதல். | :" | 10.50 | 10.50 |
| 23 | மீட்டர் பொருத்துதல் | " | 42.00 | 42.00 |
| 24 | மண் தோண்டுதல் | 1 மீ. | 21.00 | 21.00 |
| 25 | மேற்பார்வை கட்டணம் | | மொத்த தொகையில் 15 சதவீதம் | |
| 26 | குறைந்தபட்ச தொகை | | ரூ. 750 | |

குழாய் பதிக்க தோண்டப்படும் இடத்தை சீரமைக்க ஆகும் தொகை.

| வ.எண். | | 0.30 மீட்டர் நீளத்திற்கு ரூ. | 30. 90 மீட்டர் நீளத்திற்கு ரூ. |
|---|---|---|---|
| 1 | சிமெண்ட் தளம் | 2600 | 3200 |
| 2 | தார் சாலை | 2250 | 2850 |
| 3 | கருங்கல் சல்லி சாலை | 1050 | 1650 |

மேற்கண்ட விலை விகிதத்தில் இனிமேல் வழங்கப்படவுள்ள குடிநீர் இணைப்பிற்கான மதிப்பீட்டை தயார் செய்வதற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு – மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.5718/09/இ2 )

**தீர்மானம் எண். 1240 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. 01.04.2010 முதல் பெறப்படும் மனுக்கள் மீது பொருளில் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்தினை அமுல்படுத்திடவும், ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 13**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பள்ளிரோட்டில் ஜும்மா பள்ளி அருகில் பொதுநல்லி போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. மேலும் வாகனங்கள் மோதுவதால் அடிக்கடி உடைவு ஏற்படுகிறது. எனவே தற்போது அமைந்திருக்கும் இடத்திற்கு எதிர்புறமாக மாற்றி தரும்படி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள பொது நல்லியை மாற்றி அமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழ.ங்கலாம்.

(ந.க.எண்.1013/2010/இ2 )

**தீர்மானம் எண். 1241 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 14**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின்கீழ் இயங்கி வரும் மினி லாரி TN 74 Z 2339 - ன் இன்சூரன்ஸை புதுப்பிப்பதற்காக ரூ.7210/– ஐ 22.03.2010–க்குள் செலுத்தக் கேட்டு The Oriental Insurance Company Ltd., அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ. 7210/–ஐ செலுத்தி இன்சூரன்ஸை புதுப்பித்துக் கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழ.ங்கலாம்.

(ந.க.எண்.129/2008/எச்1 )

**தீர்மானம் எண். 1242 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 15**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின்கீழ் இயங்கி வரும் மினி லாரி TN 74 Z 8931 - ன் மின்கலம் பழுதடைந்து விட்டதால், அதனை மாற்றி புதிய மின்கலம் பொருத்துவதற்கு ஆகும் உத்தேசச் செலவுத் தொகை ரூ. 5000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 1205 நாள் 11.03.2010–ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 18.03.2010–ல் கோரப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆன்றனி பேட்டரி ஒர்க்ஸ்<br>T.B. ஜங்சன், மெயின்ரோடு,<br>குளச்சல். | – | ரூ. 4900.00 |
| 2 | கென்னடி பேட்டரி ஒர்க்ஸ்,<br>83.A. கே.பி.ரோடு, நாகர்கோவில் | – | ரூ. 4950.00 |

மேற்க்காணும் விலைப்புள்ளிகளில் ஆன்றனி பேட்டரி ஒர்க்ஸ், குளச்சல் எ.ன்பவரின் விலைப்புள்ளி குறைவானது. எனவே இது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.எச்1/4739/08)

**தீர்மானம் எண். 1243 குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஆன்றனி பேட்டரி ஒர்க்ஸ், T.B. ஜங்சன், மெயின்ரோடு, குளச்சல் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கிட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) ஜே. ஜேசையா,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர் (பொ)
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2010 மார்ச் திங்கள் 30.03.2010–ம் நாள் செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்றது.

***முன்னிலை***

திரு.ஜே.ஜேசையா,பி.எஸ்ஸி., டி.பி.எம்.,
நகர்மன்ற தலைவர்.

**பொருள் எண் : 1**

செயற்பொறியாளர், தமிழ்நாடு ஹவுசிங் யூனிட், திருநெல்வேலி அவர்களின் கடித எண். Plg.3929/2009 நாள் 01.03.2010 –ல் கேட்டுக்கொண்டபடி, ISHUP திட்டத்தின்கீழ் கடன் கேட்டு விண்ணப்பம் செய்துள்ளவர்களின் ரேசன் கார்டு நகல், வாக்காளர் அடையாள அட்டை, வீட்டுமனைக்கான பட்டா நகல், வீடு கட்ட அனுமதி பெற்ற பிளான், எஸ்டிமேட் மற்றும் வருமானச் சான்றுடன் விண்ணப்பிக்க கோரியதின் அடிப்படையில் மனுதாரர்களை அழைத்து 08.03.2010–ல் கூட்டம் நடைபெற்றதற்கு விண்ணப்பதாரர்கள் அமர்வதற்கு பிளாஸ்டிக் சேர் 175 எண்ணம் வாடகைக்கு எடுத்ததில் வாடகைத் தொகை ரூ. 435/– க்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.3113/2010/இ1)

**தீர்மானம் எண். 1244 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

குளச்சல் நகராட்சி எல்கைக்குட்பட்ட ஆசாத் நகரில் உள்ள மின்கம்பங்கள் எண். FII/7, FII/8 மற்றும் FII/11 ஆகியவை போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதால் அவற்றை மாற்றி சாலை ஓரத்தில் அமைத்து தருமாறு தமிழ்நாடு .மின்சார வாரியத்திற்கு கடிதம் எழுதியதில் அவற்றை மாற்றி அமைக்க ரூ.30,650/– தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்துமாறு இளநிலை பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்கள் கடிதம் அனுப்பியுள்ளார். ஆகவே மேற்கண்ட தொகையினை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 1245 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 3**

குளச்சல் நகராட்சி எல்கைக்குட்பட்ட செக்காலத்தெருவின் ஒரு பகுதியில் மழைநீர் தேங்கி நிற்பதால் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது. அதனை தவிர்க்கும் பொருட்டு மேற்கண்ட இடத்தில் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் ஓடை அமைப்பதற்கும், அதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 8,500/–க்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்ற ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண்.1131/இ1/2010)

**தீர்மானம் எண். 1246 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 4**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின்கீழ் இயங்கி வரும் மினி லாரி TN 74 5507 – கடந்த 26.04.1991 –ல் வாங்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனம் பொது சுகாதாரப் பிரிவில் தொடர்ந்து 19 ஆண்டுகளாக இயங்கி வருவதால் மிக மோசமாக சேதமடைந்துள்ளது. 10 ஆண்டுகளுக்கு மேல் இயங்கும் மினி லாரிகளின் பழுதுகளை சரி செய்வதற்கு அரசு நிர்ணயம் செய்துள்ள தொகை ரூ. 12,000/– ஆகும். இந்த நிதியாண்டில் மேற்படி வாகனத்தின் பழுதுகளை சரி செய்ததற்கும், பேட்டரி மாற்றியதற்கும் ரூ. 12,405/– ஏற்கனவே செலவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் தற்போது மேற்படி வாகனத்தில் Platform, Backside, Mud Cord போன்றவற்றை முற்றிலுமாக மாற்றவும், வாகனத்தின் பல இடங்களில் Batch work-ம் செய்ய வேண்டியுள்ளது. அது மட்டுமல்லாமல் மேலும் பல பழுதுகள் சரி செய்ய வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவு ரூ.34,500/– ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வாகனம் வாங்கப்பட்டு 18 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில் அரசு நிர்ணயித்துள்ள தொகை ரூ. 12,000/–க்கு, ரூ.12,475/– ஏற்கனவே செலவு செய்யப்பட்டுள்ளதால், மேலும் ரூ. 34,500/–ஐ செலவு செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே மேற்படி வாகனத்தை Contempt செய்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர்,

சென்னை அவர்களின் அனுமதி பெறவும், மேற்படி வாகனத்திற்கு மாற்றாக 12–வது நிதிக்குழு பரிந்துரை திட்டம் 2005–06–ல் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியிலிருந்து புதிய மினி லாரி Hydraulic ஒன்று வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பிரேரணை அனுப்புவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.7219/2008/எச்1)

**தீர்மானம் எண். 1247 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 5**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட ஆறுமுகா லாட்ஜ் அருகில், அரசு மருத்துவமனை அருகில், S.H.Store அருகில் மற்றும் MGR தெரு உட்பட 4 இடங்களில் பேருந்து நிலைய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு பம்பிங் செய்யும் 6” விட்டமுள்ள A.C. பிரதான குழாயில் உடைப்புகள் ஏற்பட்டுள்ளது. இதனால் குடிநீர் விநியோகம் பாதிப்படைந்துள்ளது. ஆகவே குடிநீர் வினியோகத்தின் அவசர அவசியம் கருதி மேற்க்கண்ட இடங்களில் ஏற்ப்பட்டுள்ள குடிநீர் பிரதான குழாயில் உள்ள உடைப்புகளை சரி செய்வதற்கும், அதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 30,000/– க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1022/2010/இ1)

**தீர்மானம் எண். 1248 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 6**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட மாலவிளை நாராயணசுவாமி கோவில் அருகில் 2” பிவிசி குழாய் உடைவு, ஈஸ்வரி ஹோட்டல் முன்புறம் 2” பிவிசி குழாய் உடைவு மற்றும் சாம்பசிவபுரம் கழிவறையில் புதியதாக பைப்புகள் போட்டு சரி செய்வதற்கும் 19.03.2010–ல் விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.சந்திரசேகர் | 0.03% மதிப்பீட்டைவிட குறைவு (ரூ.2591.00) |
| 2. | திரு.எம்.வி. குமார் | 12.00% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.2914.00)) |
| 3 | திரு.சுந்தர் | 23.6% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.3205.00)) |

இதில் திரு.சந்திரசேகர் என்பவர் மதிப்பீட்டைவிட 0.03% குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.குறிப்பு மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 1249 குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சந்திரசேகர் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் :7**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட ஏசுதாஸ் காலனியில் 4” பிவிசி குழாய் உடைவு, ஜோசப் பெனடிக்ட் காலனி பாலம் அருகில் 2” பிவிசி குழாய் உடைவு, மரமடி கழிவறை பைப் லைன் பழுதுகள் சரி செய்வதற்கும் 19.03.2010–ல் விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.சந்திரசேகர் | 0.03% மதிப்பீட்டைவிட குறைவு (ரூ.3529.00) |
| 2. | திரு.எம்.வி. குமார் | 4.20% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.3679.70)) |
| 3 | திரு.சுந்தர் | 12.4% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.3968.00)) |

இதில் திரு.சந்திரசேகர் என்பவர் மதிப்பீட்டைவிட 0.03% குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.குறிப்பு மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 1250 குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சந்திரசேகருக்கு வேலை உத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 8**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஏசுதாஸ் காலனியில் குழாய் அடைப்புகள் சரி செய்வதற்கும், சாம்பசிவபுரம் பாலம் அருகில் 4” பிவிசி குழாய் என்ட் கப் அமைப்பதற்கும் 19.03.2010—ல் விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.சந்திரசேகர் | 0.04% மதிப்பீட்டைவிட குறைவு (ரூ.3968.50) |
| 2. | திரு.எம்.வி. குமார் | 6.42% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.4225.00)) |
| 3 | திரு.சுந்தர் | 9.00% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.4330.00)) |

இதில் திரு.சந்திரசேகர் என்பவர் மதிப்பீட்டைவிட 0.04% குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.குறிப்பு மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 1251 குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சந்திரசேகருக்கு வேலை உத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 9**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட துறைமுகத்தெருவில் க.எண். 11/45—ன் அருகில் லைன் உடைவு, க.எண்.18/16—ன் முன் லைன் உடைவுகளை சரி செய்வதற்கும் 19.03.2010—ல் விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.சந்திரசேகர் | 0.05% மதிப்பீட்டைவிட குறைவு (ரூ.4253.00) |
| 2. | திரு.எம்.வி. குமார் | 3.7% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.4412.00)) |
| 3 | திரு.சுந்தர் | 6.9% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.4548.00) |

இதில் திரு.சந்திரசேகர் என்பவர் மதிப்பீட்டைவிட 0.05% குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.குறிப்பு மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 1252 குறைவான தொகையில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சந்திரசேகர் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 10**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட காந்தி முக்கில் 5” பிவிசி சப்ளை லைன் உடைவு, பீச் கோவில் முன் 4” பிவிசி சப்ளை லைன் உடைவு ஆகிய உடைவுகளை சரி செய்வதற்கு 19.03.2010—ல் விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.சந்திரசேகர் | 0.03% மதிப்பீட்டைவிட குறைவு (ரூ.4953.00) |
| 2. | திரு.எம்.வி. குமார் | 8.00% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.5347.80) |
| 3 | திரு.சுந்தர் | 3.30% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.5118.20) |

இதில் திரு.சந்திரசேகர் என்பவர் 0.03% மதிப்பீட்டைவிட குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.குறிப்பு மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 1253 குறைவான தொகையில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சந்திரசேகர் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கிட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 11**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பீச் திருப்பில் 4” லைன் உடைவு, கொட்டில்பாடு டிரான்ஸ்பார்மர் அருகில் 4” லைன் உடைவு, பீச் கோவில் முன் 4” லைனில் T-Joint உடைவு ஆகிய உடைவுகளை சரி

செய்வதற்கு 19.03.2010—ல் விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.சந்திரசேகர் | 0.09% மதிப்பீட்டைவிட குறைவு (ரூ.4899.40) |
| 2. | திரு.எம்.வி. குமார் | 4.8% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.5178.00) |
| 3 | திரு.சுந்தர் | 15.7% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.5717.00) |

இதில் திரு.சந்திரசேகர் என்பவர் 0.09% மதிப்பீட்டைவிட குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.குறிப்பு மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 1254 குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.சந்திரசேகர் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கிட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 12**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட அந்தோணியார் காலனியில் 2” ஜி.ஐ.பைப் லைன் உடைவு, பாலத்தன்கரை சம்பு அருகில் ஜி.ஐ.Bend உடைவு, பீச்சில் சொசைட்டி முன் கழிவறை செல்லும் லைன் உடைவுகளை சரி செய்வதற்கும் 19.03.2010—ல் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.சந்திரசேகர் | 0.08% மதிப்பீட்டைவிட குறைவு (ரூ.4996.00) |
| 2. | திரு.எம்.வி. குமார் | 6.5% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.5323.00) |
| 3 | திரு.சுந்தர் | 4.16% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.5208.00) |

இதில் திரு.சந்திரசேகர் என்பவர் 0.08% மதிப்பீட்டைவிட குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.குறிப்பு மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 1255 குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.சந்திரசேகர் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 13**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட அந்தோணியார் காலனியில் 2” பிவிசி குழாய் உடைவு, பீச் பம்பிங் மெயின் குழாய் கொட்டில்பாடு வால்வு பக்கம் உடைவு, சாஸ்தாங்கரை வீ.எண். 17/166 பக்கம் 3” பிவிசி குழாய் உடைவு சரி செய்வதற்கும் 19.03.2010—ல் விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.சந்திரசேகர் | 0.05% மதிப்பீட்டைவிட குறைவு (ரூ.4405.00) |
| 2. | திரு.எம்.வி. குமார் | 4.2% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.4593. 00) |
| 3 | திரு.சுந்தர் | 12.45% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.4956.00) |

இதில் திரு.சந்திரசேகர் என்பவர் 0.05% மதிப்பீட்டைவிட குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.குறிப்பு மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 1256 குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.சந்திரசேகர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கிட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 14**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட மாதாகாலனி 4” பம்பிங் மெயின் குழாய் பள்ளிமுக்கில் உடைவு, 5”பிவிசி குழாய் பீச் லோப்பஸ் மண்டபம் அருகிலும் பழுது சரி செய்வதற்கும் 19.03.2010—ல் விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.சந்திரசேகர் | 0.02% மதிப்பீட்டைவிட குறைவு (ரூ.4723.00) |
| 2. | திரு.எம்.வி. குமார் | 3.80% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.4903.45) |
| 3 | திரு.சுந்தர் | 7.45% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.5076.30) |

இதில் திரு.சந்திரசேகர் என்பவர் 0.02% மதிப்பீட்டைவிட குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.குறிப்பு மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 1257 குறைவான தொகையில் விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.சந்திரசேகர் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கிட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 15**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில் பக்கம் 4" பம்பிங் லைன் உடைவு, கண்ணன் மருத்துவமனை முன் 3" லைன் உடைவுகளை சரி செய்வதற்கும் 19.03.2010–ல் விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.சந்திரசேகர் | 0.03% மதிப்பீட்டைவிட குறைவு (ரூ.3788.00) |
| 2. | திரு.எம்.வி. குமார் | 4.40% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.3955.00 |
| 3 | திரு.சுந்தர் | 13.5% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.4300.00) |

இதில் திரு.சந்திரசேகர் என்பவர் 0.03% மதிப்பீட்டைவிட குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.குறிப்பு மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 1258 குறைவான தொகையில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சந்திரசேகர் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 16**

இந்நகராட்சி பாலத்தன்கரை சம்புவில் உள்ள Gate Valve–கள், மாதாகாலனி சம்பு பக்கம் உள்ள Gate Valve, சீம்பிளிவிளையில் Bore No. 3–ல் உள்ள கேட் வால்வுகள், ஈழக்காணிவிளையில் Elits Hand Wares–ன் அருகில் Sluice Valve மாற்றவும், சாம்பசிவபுரம் பாலத்தின் அருகில் உள்ள ஜி.ஐ. பைப் பழுது, சிங்காரவேலன் காலனி பாலத்தில் உள்ள லைன் உடைவு சரி செய்வதற்கும், பழுதடைந்த வால்வுகளை மாற்றி புதிய வால்வுகள் அமைப்பதற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர் | 0.02% மதிப்பீட்டைவிட குறைவு (ரூ.39529.80) |
| 2. | திரு.பி. தங்கமணி | 5.82% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.41840.20) |

இதில் திரு.சி.சந்திரசேகர் என்பவர் 0.02% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.குறிப்பு மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 1259 குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சந்திரசேகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கிட ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 17**

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 50643/2009/இ3 நாள் 19.03.2010–ல் அரசு கடந்த 4 ஆண்டுகளாக நடைபெற்ற திட்டப் பணிகளின் தொகுப்பினை Policy Note 2010–2011 –ல் Booklet ஆக வெளியிட உள்ளதால், குளச்சல் நகராட்சியில் நடைபெற்ற பணிகளின் புகைப்படங்கள் 12" x 8" Size–ல் 3 Copy கள் எடுத்து உடனே அனுப்புமாறு கோரியதின் அடிப்படையில் 12" x 8" Size–ல்

புகைபடங்கள் மற்றும் C.D. எடுத்து அனுப்பியதற்காக செலவுத் தொகை ரூ. 750/— வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
**தீர்மானம் எண். 1260 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 18**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின்கீழ் இயங்கி வரும் மினி லாரி TN 74 Z 8931 - ன் பழுதுகளை சரி செய்வதற்கு ஆகும் உத்தேசச் செலவுத் தொகை ரூ. 12,000/—க்கு மன்றம் தனது தீர்மானம் எண். 1164 நாள் 25.01.2010—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 24.03.2010—ல் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | M/s.மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில். | ரூ. 11,950.00 |
| 2 | KSSS ஆட்டோமொபைல்ஸ், நாகர்கோவில் | ரூ. 12750.00 |

மேற்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவானது. எனவே இது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.குறிப்பு : மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.எச்1/4739/08)

**தீர்மானம் எண். 1261 குறைவான தொகையில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கிட ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 19**

இந்நகராட்சி இந்திரா காலனி பகுதியில் அமைந்துள்ள உரக்கிடங்கில் குப்பைகள் நிரம்பி, தொடர்ந்து குப்பைகளை கொட்டுவதற்கு இடம் இல்லாமலும், லாரிகள் உள்ளே செல்வதற்கு முடியாமலும் இருந்த நிலையில் அதனை ஜே.சி.பி. இயந்திரம் மூலம் ஒதுக்கி சமப்படுத்திட ஆகும் உத்தேச செலவு ரூ.1,45,000/—க்கு மன்றம் தனது தீர்மானம் எண். 1168 நாள் 25.01.2010—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 24.03.2010—ல் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | திரு.சி.தேவஹரின் சாம், குளச்சல். | 7.50% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.1,54,800.00) |
| 2 | திரு.T. ராதாகிருஷ்ணன், குளச்சல். | மதிப்பீட்டு விகிதம் (ரூ.1,44,000.00) |

மேற்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.T.ராதாகிருஷ்ணன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவானது. எனவே இது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.குறிப்பு : மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.எச்1/731/09)

**தீர்மானம் எண். 1262 குறைவான தொகையில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T. ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 20**

குளச்சல் நகராட்சி நகர்மன்ற தீர்மான எண். 189, நாள் 31.07.2002—ன்படி குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையினை உயர்த்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. அதன்பேரில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.69233/02/குவ2 நாள் 03.12.2002—ல் கட்டண உயர்வுகளுக்கு Preliminary approval வழங்கி தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் குடிநீர் விநியோக துணை விதிகளில் திருத்தம் மேற்கொண்டு அரசிதழில் பிரசுரம் செய்து கட்டண உயர்வுகளை மேற்கொண்டு இறுதி அனுமதி பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்ட ஏப்ரல் 2003 அரசிதழில் குடிநீர் கட்டண உயர்வினை குடிநீர் விநியோக துணை விதிகளில் திருத்தம் செய்து தமிழில் வெளியிடப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்ட ஜுன் 2004 அரசிதழில் குடிநீர் கட்டண உயர்வு மற்றும் வைப்புத் தொகை குறித்து குடிநீர் விநியோக துணை விதிகளில் திருத்தம் செய்து தமிழில் வெளியிடப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண். 69233/02/குவ2 நாள் 21.04.2005—ல் கண்ட கடிதத்தின்படி திருத்தப்பட்ட குடிநீர் கட்டணத்தை இதுவரை ஏன் வசூலிக்கவில்லை என்று விளக்கம் அளிக்குமாறும், உடனே நடைமுறைப்படுத்துமாறும் ஆங்கிலத்தில் அரசிதழில் வெளியிட்டு விரைவில் இறுதி ஒப்புதல் வேண்டி விண்ணப்பிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

அதன் பிறகு கன்னியாகுமரி மாவட்ட ஜுன் 2007 மாத அரசிதழில் கட்டண உயர்வு மற்றும் வைப்புத் தொகை குறித்து குடிநீர் வினியோக துணை விதிகளில் திருத்தம் மேற்க்கொண்டு ஆங்கிலத்தில் பிரசுரம் செய்யப்பட்டதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண். 41466/07/குவ2 நாள் 03.10.2007–ல் வைப்புத் தொகை மற்றும் கட்டண உயர்வுக்கு இறுதி ஒப்புதல் வழங்கி பழைய மற்றும் புதிய குடிநீர் இணைப்புகளுக்கு உயர்த்தப்பட்ட புதிய கட்டணம் மற்றும் வைப்புத் தொகையினை வசூல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆனால் நகராட்சியால் உயர்த்தப்பட்ட வைப்புத் தொகை 01.10.2002 முதலும், உயர்த்தப்பட்ட குடிநீர் கட்டணம் 01.10.2007 முதலும் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக 24.01.2008 –ம் தேதிய தணிக்கை தலைமை கணக்கு அதிகாரி அவர்களின் (A.G.Audit) தணிக்கை அறிக்கையில் உயர்த்தப்பட்ட வைப்புத் தொகையினை அனைத்து பழைய குடிநீர் இணைப்புகளுக்கும் வசூல் செய்ய வேண்டும் எனவும், இதனால் நகராட்சிக்கு 10.06 லட்சம் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

மேலும் குடிநீர் கட்டணம் நகராட்சி நிர்வாக ஆணையரால் Preliminary approval வழங்கி குடிநீர் விநியோக துணை விதிகளில் திருத்தம் மேற்க்கொண்டு ஏப்ரல் 2003 அரசிதழில் தமிழில் வெளியிடப்பட்டுள்ளதால் அதில் இருந்து மூன்று மாதங்கள் கழித்து ஜுலை 2003 முதல் வசூல் செய்திருக்க வேண்டும் எனவும், இது மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 310 (1) மற்றும் (2) –க்கு எதிரானது எனவும், இதனால் நகராட்சிக்கு 16.81 லட்சம் ரூபாய் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து 13.01.2010–ம் தேதிய தினமணி செய்தியில் இந்திய தலைமை தணிக்கை அதிகாரி அவர்கள் வரிவசூல் செய்யாதது குறித்து பேட்டி அளித்துள்ளார். அதன்பேரில் நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் அவர்களின் நே.மு.கடித எண். 4751/2010/ஆர்–1, நாள் 11.03.2010–ல் இது குறித்து அறிக்கை அனுப்புமாறு தெரிவித்துள்ளார். 01.10.2002–ம் தேதிக்கு முந்தைய குடிநீர் இணைப்புகளுக்கும் புதிய வைப்புத் தொகையினை வசூல் செய்வதற்கும், மாவட்ட அரசிதழில் குடிநீர் கட்டண உயர்வு குறித்து குடிநீர் விநியோக துணை விதிகளில் திருத்தம் மேற்க்கொண்டு அரசிதழில் வெளியிட்ட ஏப்ரல் 2003–ல் இருந்து 3 மாதங்கள் கழித்து 01.06.2003 முதல் 30.09.2007 வரை உள்ள குடிநீர் இணைப்புகளுக்கு உயர்த்தப்பட்ட கூடுதல் கட்டணத்தை வசூல் செய்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.5718/2009/இ2)

**தீர்மானம் எண். 1263 – 2003 ஜுலை முதல் 2007 செப்டம்பர் வரையிலான குடிநீர்க் கட்டண உயர்வுத் தொகையினை ஏறக்குறைய நான்கு வருடங்களுக்குப் பிறகு, குடிநீர் இணைப்புதாரர்களிடமிருந்து வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளும் பட்சத்தில் பொதுமக்களிடமிருந்து மிகப்பெரிய அளவிலான எதிர்ப்பினை நகராட்சி நிர்வாகம் சந்திக்க நேரிடும். அதேபோன்று வைப்புத்தொகை உயர்வினையும் 01.10.2002–க்கு முன்பு உள்ள இணைப்புகளுக்கும் உயர்த்திடும் பட்சத்தில் எதிர்பாராத மக்கள் கொந்தளிப்பினை நிர்வாகம் சந்திக்க நேரிடும். எனவே கட்டண உயர்வினையும், வைப்புத் தொகை உயர்வினையும் மேலே குறிப்பிட்டவாறான காலகட்டங்களுக்கும் சேர்த்து உயர்த்துவது என்பதும், அரிய காரியம் என்பதனால் இதனை மறு பரிசீலனை செய்யுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களைக் கேட்டு மன்றம் ஏகமனதாகத் தீர்மானிக்கிறது.**

**பொருள் எண் : 21**

தற்போது கோடை காலமாக இருப்பதால் குளச்சல் நகராட்சியில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நகருக்கு குடிநீர் வினியோகம் செய்யும் ஆழ்துளை கிணறுகளிலும் தண்ணீர் மட்டம் குறைந்துள்ளது. ஆகவே குடிநீர் தட்டுப்பாட்டினை தவிர்க்கும் பொருட்டு வெள்ளிப்பிள்ளையார் கோவில் தெருவில் ஆழ்துளை கிணறு எண். 6 அருகில் ஒரு புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அதில் இருந்து வெள்ளிப்பிள்ளையார் கோவில் அருகே உள்ள ஆழ்துளை கிணறு எண். 2 அருகில் உள்ள பிரதான குழாயுடன் இணைக்கும் வகையில் பிரதான குழாய் அமைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகர்மன்றத் தலைவரால் அறிவுறுத்தப்பட்டது. ஆகவே மேற்கண்ட பணிகளை செய்வதற்கும், அதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 2,50,000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
**தீர்மானம் எண். 1264 அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) ஜே. ஜேசையா,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர் (பொ)
குளச்சல் நகராட்சி